People's Watch
No.32, Besant Road, Chokkikulam, Madurai - 625 002
Phone: +91-452-2531874 & 2539520 Fax: +91-452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org

A Network Towards Human Rights Monitoring, Intervention, Campaign, Research and Documentation
(A Programme Unit of the Centre for Promotion of Social Concerns)

19.04.2017

# பத்திரிகை செய்தி

திருப்பூர் மாவட்டம், சாமளாபுரம் பேரூராட்சியல் புதியதாக திறந்த டாஸ்மாக் மதுக்கடையை மூட வலியுறுத்தி போராடிய பெண்கள் மற்றும் பொதுமக்கள் மீது காவல்துறை நடத்திய சித்திரவதை குறித்தான

**ஆரம்பக்கட்ட கள ஆய்வு அறிக்கையில் கண்டறிந்தவைகளும், பரிந்துரைகளும்.**

பத்திரிகை ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

திருப்பூர் மாவட்டம், சாமளாபுரம் பேரூராட்சியல் புதியதாக திறந்த டாஸ்மாக் மதுக்கடையை, உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் 31.03.2017 அன்று மூடப்பட்டது. அதன்பின் டாஸ்மாக் நிர்வாகத்தின் சார்பாக சாமளாபுரம் பேரூராட்சியில் மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதியில் அவசர அவசரமாக மதுபானக்கடை திறக்கப்பட்டது.

இதனால் மக்கள் ஒன்றுகூடி மதுக்கடையை மூடக்கோரி சாலை மறியல் போராட்டம் 11.04.2017 அன்று காலை 10 மணி முதல் மாலை 4.30 மணி வரை அமைதியான முறையில் நடத்தியபோது, போராட்டத்தில் பங்கேற்பு செய்திருந்த சூளூர் MLA திரு. கனகராஜ் என்பவரை பாதுகாப்பாக காவல்துறையினர் அனுப்பிவிட்டு, அதன்பின் முன்னறிவிப்பு ஏதுமின்றி ADSP பாண்டியராஜன் தலைமையில் போலீசார் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது லத்திசார்ஜ் செய்து சித்திரவதைக்கு உட்படுத்தி கொடும் காயம் ஏற்படுத்தியுள்ளனர்.

இச்சம்பவத்தை பத்திரிகை, தொலைக்காட்சி வாயிலாக தகவலறிந்த பின்பு மக்கள் கண்காணிப்பகத்தில் செயல்படும் கண்காணிப்பு பிரிவின் சார்பில் கள ஆய்வு செய்வதற்கு 5 நபர்கள் உள்ளடங்கிய பெண்கள் மட்டும் பங்கேற்பு செய்த கள ஆய்வுக்குழு அமைக்கப்பட்டது.

12.04.2017 அன்று கள ஆய்வு குழுவினர் வருகை குறித்து DIG, IG, SP மற்றும் மங்கலம் காவல்நிலைய ஆய்வாளர் ஆகியோர்களுக்கு தகவல் அனுப்பப்பட்டது.

13.04.2017 அன்று, கள ஆய்வுக்குழுவினர் சம்பவ இடத்திற்கு சென்று, பாதிக்கப்பட்டவர்கள், பாதிப்பு ஏற்படுத்தியவர்கள், சம்பவ சாட்சிகள் மற்றும் அரசு

அலுவலர்கள் ஆகியோர் அனைவரையும் நேரில் சந்தித்து திரட்டப்பட்ட தகவல்கள் பெறப்பட்ட ஆவணங்கள் மற்றும் நேரில் பெறப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவைகளை அடிப்படையாக வைத்து கள ஆய்வுக் குழுவினரால் உருவாக்கப்பட்ட கண்டறிந்தவைகளும் பரிந்துரைகளும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**மிக முக்கிய சம்பவங்கள்**

1. போராட்டத்தை மக்கள் காலை 10.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை அமைதியான முறையில்தான் நடத்தினார்கள்.
2. புதிய டாஸ்மாக் மதுக்கடை வருவதற்கு முன்பாகவே மக்கள் தமிழக முதல் மற்றும் அரசு அலுவலர்கள் பலருக்கு புகார்மனு அனுப்பியும் நடவடிக்கை எடுக்காததால்தான் அடுத்த கட்ட நடவடிக்கையாக சாலைமறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
3. சுமார் 175க்கும் மேற்பட்ட பெண்கள் போராட்டத்தில் பங்கேற்ற இடத்தில் பாதுகாப்பு பணிக்காக இரண்டு பெண் காவலர்கள் மட்டுமே இருந்துள்ளனர்.
4. போராட்டத்தில் பங்கேற்பு செய்திருந்த சூலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. கனகராஜ் அவர்களை போலீஸ் பாதுகாப்பாக அனுப்பிய பின்புதான் மக்கள் மீது போலீசார் லத்தி சார்ஜ் செய்துள்ளனர்.
5. பாதிக்கப்பட்ட நபர்கள் காவல்துறையினரால் மிரட்டப்பட்டதால் இன்று வரை புகார் கொடுக்க முன் வரவில்லை.
6. சட்டவிரோத செயலில் ஈடுபட்ட காவலர்கள் அனைவரையும் பணி இடைநீக்கம் செய்யவேண்டும்.
7. ADSP பாண்டியராஜன் அவர்கள் வேண்டுமென்றேதான் ஈஸ்வரி க/பெ. பழனிச்சாமி என்பவரை அடித்துள்ளார். மேலும் தான் செய்த குற்றத்தை மறைக்க செய்தியாளர்கள் மீது வீண் பழி சுமத்துகிறார்.

தோழமையுடன்

**(ஹென்றி திபேன்)**
செயல் இயக்குநர்,
மக்கள் கண்காணிப்பகம்

**கண்டறிந்தவைகள்:-**

1. திருப்பூர் மாவட்டம், பல்லடம் தாலுகா, சாமளாபுரம் பேரூராட்சியில் அமைந்துள்ள அன்னூர் காமநாயக்கன்பாளையம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அரசுக்கு சொந்தமான மதுபானகடை சுமார் 10 ஆண்டுகளாக இயங்கி வந்த நிலையில் உச்சநீதமன்ற உத்தரவின்படி 31.03.2017ல் இருந்து மதுபானகடை மூடப்பட்டது என்பதனை செல்லப்பன் த/பெ. கணபதி என்பவரின் வாக்குமூலம் வாயிலாக அறியமுடிகிறது.
2. சாமளாபுரத்தில் மூடப்பட்ட மதுபானக்கடையை, அதே பேரூராட்சியில் பொது மக்கள் வசிக்கக்கூடிய, பகுதியான பிரசித்தபெற்ற “வாழை தோட்டத்து அய்யன் மாரியம்மன்கோவில்” செல்லும் வழியில் புதியதாக அமைப்பதற்காக புதிதாக கட்டிடம் கட்டும் பணி அவசர அவசரமாக நடைபெற்று வந்தது என்பதை தவமணி க/பெ. கதிர்வேல் என்பவரின் வாக்குமூலம் மற்றும் பலர் வாயிலாக அறிய முடிகிறது.
3. டாஸ்மாக் மதுபானக் கடைக்காக புதிதாக கட்டிடம் கட்டுவதை அறிந்த சிலர் குறிப்பாக பெண்கள் தனாாக முன்வந்து புதிதாக டாஸ்மாக் கடையை திறக்கவிடாமல் தடுப்பதற்காக இரண்டு நாட்களாக ஒவ்வொரு வீடாக சென்று பெண்களை சந்தித்து அரசிடம் புகார் கொடுப்பதற்கான ஆலோசனை மற்றும் பணிகள் நடைபெற்றது என்பதை தவமணி க/பெ. கதிர்வேல் என்பவரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.
4. சாமளாபுரம் பேரூராட்சியில் செயல்பட்டு வந்த டாஸ்மாக் கடையினால் கிராமத்தில் உள்ள பெரும்பான்மையான ஆண்கள் குடிபழக்கம் உள்ளவர்களாக மாறி உள்ளனர். இதனால் குடும்பங்களில் அதிகமாக பிரச்சனை ஏற்பட்டு வந்துள்ளது. மேலும் டாஸ்மாக் மதுபானக்கடை அமைந்துள்ள சாலை வழியாக பெண்கள் வரும்போது பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவியுள்ளது. மேலும் தற்சமயம் புதியதாக டாஸ்மாக் மதுகடை திறந்துள்ள கடைக்கு முன்பாக கடந்த இரண்டு ஆண்டுகளில் விபத்தில் ஐந்து நபர்கள் இறந்துள்ளனார்கள்.

   இதனால் சாமளாபுரத்தில் வாழும் பொதுமக்கள் இணைந்து தங்கள் ஊரில் புதிதாக டாஸ்மாக் கடை திறக்கக் கூடாது என்ற கோரிக்கையை முன் வைத்து சுமார் 300 நபர்கள் கையொப்பமிட்ட புகார் மனுபவினை 1) திருப்பூர் மாவட்ட ஆட்சியர், 2). திருப்பூர் மாவட்ட டாஸ்மாக் மேலாளர், 3). டாஸ்மாக் மண்டல அலுவலர், 4) மாநில தலைமை செயலாளர், 5). முதல்வரின் தனிப்பிரிவு ஆகியோருக்கு 16.03.2017 அன்று

புகார் மனு அனுப்பப்பட்டதாக அருண்குமார் த/பெ.கருப்பசாமி மற்றும் தவமணி க/பெ. கதிர்வேல் மற்றும் பலரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

5. மக்கள் குடியிருப்பு பகுதிகுள் புதியதாக டாஸ்மாக் கடையை திறக்கக்கூடாது என்று சாமளாபுரம் பொதுமக்கள் சார்பாக ஏற்கனவே அரசு அலுவலர்களுக்கு புகார் மனு அனுப்பிய பின்பும், புகாரின் மீது, எவ்வித நடவடிக்கையும் அரசு எடுக்கவில்லை மேலும் பொதுமக்களிடம் கருத்து கேட்புகூட்டம் ஏதும் நடத்தாமலும், டாஸ்மாக் நிர்வாகத்தினர் எவ்வித முன்னறிவிப்பு இன்றி சாமளாபுரம் பேரூராட்சியில் அமைந்துளள் வாழைத்தோட்டத்து அய்யன்கோவில் சாலையில் 11.04.2017 அன்று டாஸ்மாக் மதுபானக்கடை திறந்துள்ளனர் என்பதனை செல்லப்பன் த/பெ.கணபதி, வெங்கடேஷ், தவமணி க/பெ. கதிர்வேல், ஈஸ்வரி க/பெ. பழனிசாமி மற்றும் அருண்குமார் த/பெ. கருப்பசாமி ஆகியோரின் வாக்குமூலங்கள் வாயிலாக அறிய முடிகிறது.
6. சாமளாபுரம் பேரூராட்சியில் திடீரென டாஸ்மாக் மதுகடை திறந்ததை அறிந்த பொது மக்கள், அரசிடம் புகார் மனு கொடுத்தும் நடவடிக்கை ஏதும் இல்லாததால், இதனால் நம்பிக்கை இழந்த பொதுமக்கள், வேறுவழியின்றி ஒன்றாக திரண்டு, சுமார் 450க்கும் மேற்பட்டோர் 11.04.2017 அன்று காலை சுமார் 10.30 மணி அளவில் இருந்து மாலை 4.30 மணி வரை புதிதாக திறக்கப்பட்ட டாஸ்மாக் மதுக்கடையை மூட வலியுறுத்தி சோமனூர் மூன்று முக்கு சாலையில், அமைதியான முறையில் சாலை மறியல் போராட்டம் செய்தனர் என்பதனை தவமணி க/பெ. கதிர்வேல், விஜயா க/பெ. சுந்தரம், வெங்கடேஷ் த/பெ. செல்லபாண்டி மற்றும் பலரின் வாக்குமூலங்கள் வாயிலாக அறிய முடிகிறது.
7. சாமளாபுரம் பேரூராட்சியில் புதிய டாஸ்மாக் கடையை மூடக்கோரி மக்கள் சாலை மறியல் நடத்திக் கொண்டிருந்த போது பன்னாரியம்மன் கோவிலுக்கு சாமி கும்பிட்டுவிட்டு குடும்பத்துடன் அவ்வழியாக திரும்பிக் கொண்டிருந்த சூலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.கனகராஜ் என்பவர் மதியம் சுமார் 1 மணி அளவில் போராட்டம் நடந்து கொண்டு இருந்த சோமனூர் மூன்று முக்கு சாலை வழியாக வரும் பொழுது மக்கள் போராடுவதை கண்ட சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.கனகராஜ் இது தனது தொகுதி பிரச்சனை என முடிவு செய்து தானாக முன் வந்து போராட்டத்தில் பங்கேற்பு செய்தார் என்பதனை தவமணி க/பெ.கதிர்வேல், அருண்குமார் த/பெ. கருப்பசாமி மற்றும் ADSP பாண்டியராஜன் ஆகியோரின் வாக்குமூலங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

8. சாமளாபுரம் பேரூராட்சியில் டாஸ்மாக் மதுகடைக்கு எதிராக மக்கள் 11.04.2017 அன்று சாலை மறியல் செய்து வந்த நிலையில் இப்போராட்டத்தில் தானாக முன்வந்து பங்கேற்பு செய்த சூலூர் தொகுதி எம்.எல்.ஏ திரு.கனகராஜ் அவர்கள் சுமார் மாலை 4.30 வரை பங்கேற்றுள்ளார். மேலும் போராட்டம் சார்ந்த எவ்வித முடிவும் எடுக்காத நிலையில், அவ்விடத்தில் இருந்து எம்.எல்.ஏ அவர்கள் கிளம்ப முயலும் பொழுது பெண்கள் அவரை சூழ்ந்து கொண்டு எங்களது கோரிக்கை இன்னும் நிறைவேறவில்லை, எனவே மக்கள் பிரதிநிதியான நீங்கள் சாமளாபுரம் பேரூராட்சியில் புதியதாக மதுக்கடை திறம்பட மாட்டாது என எழுத்து மூலமாக எழுதி தர வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர். ஆனால் எம்.எல்.ஏ அவர்கள் எந்தவித உத்தரவாதமும் போராட்டத்தில் பங்கேற்றவர்களிடம் அளிக்காமல் போராட்ட இடத்தை விட்டு போலீஸ் ஏற்பாடு செய்திருந்த காரில் ஏறிச் சென்றுவிட்டார் என விஜயா க/பெ. சுந்தரம், வெங்கடேசன் த/பெ. செல்லபாண்டி ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறியப்படுகிறது.

9. சட்டமன்ற உறுப்பினர் கனகராஜ் காரில் ஏறி புறப்பட்டவுடன், உடனே போராட்டத்தின் போது பாதுகாப்பு பணிக்கு நின்றுகொண்டிருந்த ADSP பாண்டியராஜன் தலைமையில் சுமார் 30க்கும் மேற்பட்ட போலீசார், சட்டமன்ற உறுப்பினரிடம் டாஸ்மாக் கடையை மூட வேண்டும் என உத்தரவாதம் கேட்ட பெண்களான ஈஸ்வரி, விஜயா, மணிமேகலை மற்றும் சிலரை அடையாளம் கண்டு முதலில் அவர்களை குறிவைத்து தாக்கியுள்ளனர். அதன்பின்பு போராட்டத்தில் பங்கேற்பு செய்த அனைவர் மீதும் முரட்டுத்தமனாக போலீசார் லத்தியால் தாக்கி விரட்டி அடித்தனர் என்று ஈஸ்வரி க/பெ. பழனிசாமி, தவமணி க/பெ. கதிர்வேல் ஆகியோர் மற்றும் பலரின் வாக்குமூலங்களில் இருந்து அறிய முடிகிறது.

10. ADSP பாண்டியராஜன் அவர்கள் தலைமையில் போலீசார் நடத்திய தாக்குதல்களில் ஈஸ்வரி க/பெ.பழனிசாமி என்பவருக்கு காது கேட்கும் திறன் பாதிக்கப்பட்டுள்ளது. மற்றும் சிவகணேஷ் த/பெ. ஈஸ்வரன் என்பவருக்கு தலையில் இரத்தகாயமும், மேலும் சுமார் 11 நபர்களுக்கும் வீக்க காயங்கள் அடைந்துள்ளனர் என்பதனை சாமளாபுரத்தில் அமைந்துள்ள எஸ்.கே.மருத்துவமனையின் மருத்துவ அறிக்கைபடியும், திருப்பூரில் உள்ள ரேவதி மருத்துவமனை அறிக்கையின் படியும் காயம் அடைந்த அருண்குமார், விஜயா ஆகியோரின் வாக்குமூலங்கள் வாயிலாகவும் அறியப்படுகிறது.

11. போராட்டத்தின் போது காவல்துறை நடத்திய தடியடியால் பயந்து போராட்ட இடத்தை விட்டு கலைந்து சென்ற ஈஸ்வரி க/பெ. பழனிசாமி என்பவரை ADSP பாண்யடிராஜன்

என்பவர் தடுத்து லத்தியால் இடது தொடையில் அடித்துள்ளார். அதன்பின் மேலும் அடிக்க லத்தியை ஓங்கிய போது ஈஸ்வரி க/பெ. பழனிசாமி என்பவர் லத்தியை தமது கையால் தடுத்துள்ளார். இதனால் ஆத்திரம் அடைந்த ADSP பாண்யடிராஜன் என்பவர் தன் இடது கையில் லத்தியை கைத்துக் கொண்டு தன் வலது கையால் ஈஸ்வரியின் இடது கன்னத்தில் ஓங்கி அறைந்துள்ளார். இதனால் ஈஸ்வரி க/பெ.பழனிசாமி என்பவருக்கு கேட்கும் திறன் பாதிக்கப்பட்டது என்பதனை ஈஸ்வரி க/பெ.பழனிசாமி மற்றும் விஜயா க/பெ. சுந்தரம், வெங்கடேஷ் த/பெ. செல்லபாண்டி ஆகியோரின் வாக்குமூலங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

12. ஈஸ்வரி க/பெ.பழனிசாமி என்பவரை தாக்கிய ADSP பாண்யடிராஜன் என்பவரை கள ஆய்வு குழுவினர் நேரில் சந்தித்து நடந்து முடிந்த தாக்குதல் குறித்தும் ஈஸ்வரி மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்தும் தகவல் கேட்ட பொழுது ADSP பாண்யடிராஜன் என்பவர் நான் அடிப்பதற்கு கையை தூக்கவே இல்லை என்றும்,பாலிமர் தொலைக்காட்சியின் ரிப்போர்ட்டர் வேண்டுமென்றே, நான் அடித்தது போல் காட்சியை செயற்கையாக இணைத்து விட்டார் (மார்பிங்) என்று கூறியுள்ளார். மேலும் பொது மக்கள் யாரையும் காவல்துறையினர் லத்தியால் அடிக்கவில்லை என்றும், ஆனால் பொது மக்கள் பயந்து ஓடும் பொழுது தானாக விழுந்து காயம் ஏற்பட்டது என்றும் கூறி உள்ளார். இதன்மூலம் நடந்த சம்பவத்தை ADSP பாண்டியராஜன் முன்னுக்குப்பின் முரணாக பேசியுள்ளார். மேலும் பலகோடி பேர் காட்சி ஊடகத்தில் நேரடியாக பார்த்தும், ADSP பாண்யடிராஜன் தான் அடிக்கவில்லை என்று தவறான தகவலை கூறியுள்ளார் என்பதை அறியமுடிகிறது.

13. கள ஆய்வு குழுவினர் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்த பொழுது குறிப்பாக தாக்குதலுக்கு உள்ளான ஈஸ்வரி க/பெ. பழனிசாமி, சிவகணேஷ் த/பெ.ஈஸ்வரன் ஆகியோர் உட்பட காவல்துறையினரால் காயப்பட்ட அனைவரும் தாக்குதலில் ஈடுபட்ட காவல்துறையினருக்கு பயந்து இன்றுவரை புகார் ஏதும் கொடுக்க முன்வரவில்லை என்பதை பாதிக்கப்பட்டவர்களின் வாக்குமூலங்கள் வாயிலாக அறியமுடிகிறது. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் காவல்துறையினரால் மிரட்டப்பட்டுள்ளனர் என்பதனை கள ஆய்வு குழுவினரால் யூகிக்க முடிகின்றது.

14. புதியதாக திறக்கவுள்ள டாஸ்மாக் மதுக்கடைக்கு எதிராக சாமளாபுரம் பேரூராட்சியில் போராட்டம் நடத்துவதற்கு இரண்டு நாட்களாக மக்களை சந்தித்து பிரச்சனையை எடுத்து சொல்லி வெளிப்படையாக மக்கள் திரட்டப்பட்டுள்ளனர்.

மக்கள் போராட்டம் என்பது ரகசியமானதாக செயல்படவில்லை. மேலும் உளவுத்துறையினர் இப்போராட்டத்தினை முன் கூட்டியே அறியமுடியவில்லை. இது அவர்களின் பலவீனத்தை வெளிப்படுத்துகிறது. மேலும் மக்கள் தங்களின் வாழ்வாதார உரிமையை பாதுகாக்கும் நோக்கத்திற்காகவே இப்போராட்டத்தினை நடத்தியுள்ளனர் என்பதனை கண்டறிய முடிகின்றது.

15. சாமாளபுரம் பேரூராட்சியை சார்ந்த மக்கள் டாஸ்மாக் மதுக்கடைக்கு எதிராக, சுமார் 450க்கும் மேற்பட்டோர் போராடி வந்த நிலையில் அதில் சுமார் 150க்கும் மேற்பட்ட நபர்கள் பெண்கள் மட்டும் இப்போராட்டத்தில் பங்கேற்பு செய்துள்ளனர். ஆனால ADSP பாண்யடிராஜன் தலைமையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசாரில் இரண்டு பெண் காவலர்களில் மட்டுமே பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தபட்டிருந்தனர். அதிலும் இரு பெண் காவலர்களில் ஒருவர் போராட்டத்தை வீடியோபதிவு செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்பதனை தவமணி க/பெ. கதிர்வேல் மற்றும் ஈஸ்வரி க/பெ. பழனிசாமி ஆகியோர்களின் வாக்குமூலம் வாயிலாக அறியமுடிகின்றது.

மேலும் மிகசிறிய மாவட்டமாக திருப்பூர் மாவட்டத்தில் பெண்கள் அதிகளவில் பங்கேற்பு செய்து போராட்டம் நடத்தியபோது, போதிய பெண் காவலர்கள் பாதுகாப்பு பணிக்கு அனுப்பாமல் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மெத்தனமாக செயல்பட்டுள்ளார் என்பதனை அறிய முடிகின்றது.

16. சாமளாபுரம் பேரூராட்சியில், டாஸ்மாக் மதுபானக்கடைக்கு எதிராக, மக்கள் போராட்டம் நடத்தியபோது அப்போராட்டத்தில் சூலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.கனகராஜ் அவர்கள் தானாக முன்வந்து போராட்டத்தில் பங்கேற்பு செய்துள்ளார். மேலும் அவரோடு வந்த அவரது துணைவியார் அவ்விடத்தில் சிறிது நேரம் காரில் இருந்துவிட்டு அப்படியே அதே காரில் புறப்பட்டு சென்று விட்டார் என்பதனை அருண்குமார் மற்றும் விஜயகுமார் மற்றும் பலரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகின்றது.

17. போராட்டத்தில் தானாக முன்வந்து பங்கேற்பு செய்த சூலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.கனகராஜ் அவர்கள், போராட்ட இடத்திலிருந்து மாவட்ட ஆட்சியரிடம் தொலைபேசியில் பேசியுள்ளார். மேலும் பல்வேறு நபர்களிடமும் போராட்டம் குறித்து தொடர்ந்து பேசியுள்ளார். இந்நிலையில் மாலை சுமார் 4.30 மணியளவில் காவல்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட மாற்று காரில் ஏறி புறப்பட்டு சென்றுள்ளார் என்பதனை அருண்குமார் த/பெ. கருப்பசாமி, வெங்கடேஷ் த/பெ. செல்லப்பாண்டி ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறியமுடிகின்றது.

மேலும் சட்டமன்ற உறுப்பினர் போராட்ட களத்தை விட்டு சென்றவுடன் போலீசார் லத்தி சார்ஜ் செய்ததால் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட லத்தி சார்ஜிற்கு மேலிட உத்தரவுதான் காரணம் என்பதனை கள ஆய்வுக்குழுவினரால் யூகிக்க முடிகின்றது.

18. மாவட்ட நீதிமன்ற அந்தஸ்த்தில், நீதிபதியின் தலைமையில் செயல்படும் திருப்பூர் மாவட்ட இலவச சட்ட உதவி ஆணைக்குழு, காவல்துறையினரால் பாதிக்கப்பட்ட பெண்களை, சந்திப்பதற்கு, இலவச சட்ட ஆணைக்குழுவை சார்ந்த பணியாளரையோ அல்லது வழக்கறிஞர்களோ இதுவரை வரவில்லை என்பதனை அருண்குமார் த/பெ. கருப்புசாமி, தவமணி க/பெ. கதிர்வேல் மற்றும் வெங்கடேஷ் த/பெ. செல்லப்பாண்டி ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகின்றது.

    மேலும் மாவட்ட இலவச சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்டப்பிரிவு 12-ன் கீழ் பெண்கள், தொழிலாளர்கள், பட்டியல் மற்றும் பழங்குடி சமூகத்தினர் சட்ட மீறல்களில் பாதிக்கப்பட்டால் மாவட்ட இலவச சட்ட உதவி ஆணைக்குழு தானாக முன்வந்து உதவவேண்டும் என கூறுகின்றது. இதன்மூலம் திருப்பூர் மாவட்ட இலவச சட்ட உதவி ஆணைக்குழு கவனக்குறைவாக செயல்படுகின்றது என அறிய முடிகின்றது.

19. சாமளாபுரம் பேரூராட்சியை சார்ந்த மக்கள் டாஸ்மாக் மதுபானக்கடையை மூட வலியுறுத்தி போராடியதால் காவல்துறையின் தாக்குதலுக்கு ஆளானார்கள். குறிப்பாக ADSP பாண்டியராஜன் அவர்கள் ஈஸ்வரி க/பெ. பழனிச்சாமி என்ற பெண்ணின் கன்னத்தில் ஓங்கி அறைந்த சம்பவத்தை தொலைக்காட்சி வாயிலாக பல லட்சம் மக்கள் பார்த்து காவல்துறையின் வன்முறையை கண்டு அதிர்ந்தனர்.

    இந்நிலையில் பாதிக்கப்பட்ட பெண்ணை மற்றும் பொதுமக்களை சந்தித்து உரிய விசாரணை செய்வதற்கு அல்லது ஆறுதல் சொல்வதற்குக்கூட காவல்துறையைச் சார்ந்த மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளரோ அல்லது உயர் காவல் அலுவலர்களோ, மேலும் மாவட்ட ஆட்சியரோ அல்லது வருவாய்துறை அலுவலர்களோ வரவில்லை என்பதனை பாதிக்கப்பட்ட பொதுமக்கள் பல்வேறு நபர்கள் கொடுத்த தகவல் அடிப்படையில் அறிய முடிகின்றது.

20. கள ஆய்வுக் குழுவினர் மங்களம் காவல் நிலைய, சர்க்கிள் இன்ஸ்பெக்டர் திரு.வேல்முருகன் மற்றும் மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் உமா அவர்களை சந்தித்து நடந்து முடிந்த காவல்துறையின் தாக்குதல் குறித்தும் அதற்கான ஆவணத் தகவல் குறித்தும் குற்ற எண் குறித்தும் கேட்கும் போது, விசாரணையில் இருக்கும்போது தகவல் தர முடியாது என்று காவல் ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். மேலும் நீங்கள் பெரிய NGO எனவே உங்களால் கண்டுபிடிக்க முடியும் என்று

பொறுப்பற்ற முறையில் மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் உமா அவர்கள் தெரிவித்துள்ளார். காவல்துறையின் இச்செயல்பாட்டின் மூலம் காவல்துறையின் வெளிப்படை இல்லா தன்மையை அறிய முடிகிறது. மேலும் தகவலை பொதுமக்களுக்கு தரவேண்டும் என்ற கடப்பாட்டில் இருந்து தவறுகிறார்கள் என்பதனை அறியமுடிகின்றது.

**பரிந்துரைகள்**

- சாமளாபுரம் மக்கள் மீது காவல்துறையினர் நடத்திய தாக்குதளுக்கு திருப்பூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரின் பொறுப்பற்ற தன்மையும்,ஒரு காரணமாக இருப்பதால், அதே அந்தஸ்தில் உள்ள கோயம்புத்தூர் புறநகர் காவல்துறை கண்காணிப்பாளர் இவ்வழக்கினை விசாரிப்பது, சரியான விசாரணையாக இருக்காது என்பதால், அருகாமை மாவட்டமான கோவை மாவட்டத்தில் இருக்கும் திரு.பாரி, I.G அவர்கள் இவ்வழக்கினை விசாரணை நடத்த வேண்டும் என மக்கள் கண்காணிப்பகம் கோருகின்றது.
- சாமளாபுரம் மக்கள் காவல் துறையினரால் தாக்குதலுக்கு உள்ளாகி அச்சமடைந்த நிலையில் உள்ளார்கள். இதனால் பாதிக்கப்பட்ட மக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் உயர் காவல் அலுவலர்களும் நேரில் சந்தித்து ஆறுதலும் நம்பிக்கையும் வழங்கினால் மட்டுமே பாதிக்கப்பட்ட மக்கள் மிக துணிவுடன் தைரியமாக விசாரணையின்போது உண்மையைச் சொல்லுவார்கள். எனவே மாவட்ட ஆட்சியர் அவர்களும், காவல்துறை உயர் அலுவலர்களும் உடனடியாக பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்க வேண்டும் என கள ஆய்வுக் குழு பரிந்துரை செய்கிறது.
- போராட்டத்தின்போது காவல்துறையினரின் தாக்குதலால் பொதுமக்கள் பலருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. காயம்பட்டவர்களை அரசு மருத்துவமனைக்கு அனுப்புவதற்கு உரிய ஏற்பாடுகள் காவல்துறையினர் செய்யவில்லை. இதனால் கவனக்குறைவாக செயல்பட்ட மற்றும் கடமை தவறிய அனைத்து காவல்துறை அதிகாரிகளையும் பணி இடைநீக்கம் செய்ய வேண்டும்.

- அதிகமான பெண்கள் போராட்டத்தில் பங்கெடுத்த நிலையில் போதிய அளவு பாதுகாப்புப் பணிக்கு பெண் காவலர்களை அனுப்பாமல் தனது கடமையை தவறிய மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரும், உத்தரவிடும் அதிகாரம் பெற்றவருமான (Command) திருமிகு. ஊமா அவர்கள்மீது காவல்துறையின் நடத்தை நெறிமுறைகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பரிந்துரை செய்கிறோம்.
- ADSP பாண்டியராஜன் அவர்கள் தாக்கியதால் இடதுகாது பாதிக்கப்பட்டு அதனால் கேட்கும் திறனை இழந்த ஈஸ்வரி, க.பெ பழனிசாமி மற்றும் பலத்த இரத்தகாயம் அடைந்த சிவகணேஷ் த.பெ ஈஸ்வரன் ஆகிய இருவரையும் உயர் மருத்து சிகிச்சைக்காக சென்னையில் உள்ள பல்நோக்கு மருத்துவமனையில் நிபுணர்கள் முன்னிலையில் சிகிச்சை வழங்க வேண்டும். மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு துணையாக வரக்கூடிய குடும்ப உறுப்பினர்களுக்கு உணவு மற்றும் தங்குவது, போக்குவரத்து செலவு உட்பட அனைத்தும் அரசே பொறுப்பு ஏற்க வேண்டும் என பரிந்துரை செய்யப்படுகிறது.
- சாதாரண காயம் அடைந்த ஒவ்வொரு நபருக்கு ஆரம்பகட்ட நிவாரணத் தொகையாக ரூ.25,000 பணமும், பலத்த காயம் அடைந்த ஈஸ்வரி, க.பெ பழனிச்சாமி, சிவகணேஷ் த.பெ ஈஸ்வரன்ஆகிய இருவருக்கும் காயம் முழுமையாக குணமடையும்வரை சிகிச்சை பெறும் ஒவ்வொரு நாளும் குடும்ப செலவினங்களுக்காக ரூ.1000ம் வழங்க வேண்டும் என பரிந்துரை செய்யப்படுகின்றது.
- மனித உரிமை மீறல் சம்பவத்தில் ஈடுபட்ட அனைத்து காவலர்கள் மீதும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்ய வேண்டும். மேலும் மாநில, மாவட்ட இலவச சட்ட உதவி ஆணையத்தின் மூலம் மூத்த வழக்கறிஞர் ஒருவரை நியமனம் செய்து, இவ்வழக்கினனை நடத்த உதவ வேண்டும் என பரிந்துரை செய்யப்படுகிறது.
- அமைதியான முறையில் போராடிய மக்கள் மீது கொடூர தாக்குதல் நடத்திய பின்பும் இச்சம்பவத்தை பார்த்த மாநில மனித உரிமை ஆணையம் மௌனம் சாதிப்பதற்கு கள ஆய்வுக்குழு தனது வருத்தத்தை பதிவு செய்கிறது. மேலும்

உயர்நீதிமன்ற நீதிபதி அந்தஸ்த்தில் மனித உரிமை ஆணைய தலைவியும், விசாரணை நடத்துவதற்காக ஏ.டி.எஸ்.பி ஒருவரும், நீதிபதி அந்தஸ்த்தில் பதிவாளர்களும் ஆணையத்தில் இருக்கும் நிலையில் இவர்கள் அனைவரும் மௌனமாக இருப்பது சட்ட உதவியே எட்ட முடியாத நிலையில் இருக்கும் ஏழை மக்களை பார்த்து ஏளனம் செய்வதுபோல் உள்ளது என கள ஆய்வுக்குழு கருதுகிறது.

- காயம் அடைந்தவர்கள் சாமளாபுரம் எஸ்.கே மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்றுள்ளனர். ஆதேபோல் திருப்பூரில் இருக்கும் ரேவதி மருத்துவமனையிலும் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை பெற்று உள்ளனர். ஆனால் இரு தனியார் மருத்துவமனைகளிலும் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை பெற்றது குறித்து மருத்துவமனை நிர்வாகத்தினர் அருகாமையில் இருக்கும் அரசு மருத்துவமனைக்கு தகவல் சொல்ல தவறி உள்ளது. இச்சம்பவம் ஆனது இந்திய மருத்துவ கவுன்சில் நெறிமுறைகளை மீறி உள்ளது. ஏனவே இரு தனியார் மருத்துவமனை மீதும் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பரிந்துரை செய்கிறது.
- இது மனித உரிமை மீறல் சம்பவம் என்பதால் தமிழக முதல்வர் அவர்கள் காவல்துறையை நிர்வகிக்க கூடிய உள்துறைக்கு அமைச்சராகவும் இருப்பதால், கள ஆய்வுக்குழு கொடுக்கும் பரிந்துரையை ஏற்று காவல்துறையினர் செய்த மனித உரிமை மீறல் சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்து மேலும் இதுபோன்ற சம்பவம் இனிமேலும் நடக்காது என்ற உத்திரவாதத்தை மக்களிடம் உத்திரவாதம் வழங்க வேண்டும். மேலும் ஐ.நாவின் பாதிக்கப்பட்டோருக்கான உரிமையை நிலை நாட்டப்பட வேண்டும் என கள ஆய்வுக்குழு கேட்டு கொள்கிறது.
- Indian Medical Council (Professional conduct, Etiquette and Ethics) Regulations 2002. Unethical Acts: A physician shall not aid or abet or commit any of the following acts which shall be construed as unethical.
- Human Rights: The physician shall not aid or abet torture nor shall be a party to either infliction of mental or physical trauma or concealment of torture inflicted by some other person or agency in clear violation of human rights.